# மதுவரிக் கட்டளைச் சட்டம்

## மதுவரி அறிவித்தல் இல: 12/2018

### குடிபானமல்லாத ஸ்பிரித்தினை இறக்குமதிசெய்வதற்கான மதுவரி

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 2 ஆம், 12 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் 2018 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 21 ஆந் திகதிய **2059/32** ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட **07/2018** ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலில் பந்தி (ஆ) ஆனது பின்வரும் புதிய பந்தியினை பதலீடுசெய்வதன் மூலம் திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

“ (ஆ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கைசெய்துள்ள ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்டுள்ள ஏதேனும் உற்பத்தி நிறுவனமொன்று (இதன் பின்னர் “இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்ற உற்பத்தி நிறுவனம்” என வாசிக்கப்படும்), மதுவரி அறிவித்தல் இலக்கம் **07/2018** இன் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு உற்பத்திசெய்யப்படுகின்ற உற்பத்தியில் 100% பொருட்களும் ஏற்றுமதிசெய்யப்படுமாயின், மற்றும் மேற்குறித்த ஏற்றுமதியினை இலங்கை முதலீட்டுச் சபைப் பணிப்பாளர் நாயகம் சான்றுபகருமாயின், அதற்கான மூலப் பொருட்கள் இறக்குமதி மதுவரியானது 2018 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 04 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் அறவிடப்படாதிருத்தல் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், இலங்கை முதலீட்டுச் சபையில் அவ்வாறு அங்கீகாரம் பெற்று அதன் உற்பத்தியில் ஏதேனுமொரு பங்கினை இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் உள்நாட்டுச் சந்தையில் விற்பனைக்கு ஏதேனுமொரு நிறுவனம் விடுமாயின், அக்குறித்த நிறுவனம் உள்நாட்டுச் சந்தையில் விற்பனைக்குவிடுகின்ற பங்கிற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள **07/2018** ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலில் (அ) பந்தியில் விதிக்கப்பட்டுள்ள மதுவரியினை ஏற்புடமையாக்கிக்கொள்ளல் வேண்டும்.”

மங்கள சமரவீர

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

கொழும்பு -01

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

2018 ஒக்தோபர் 03 ஆம் திகதி